அசல் வழக்கு எண்: 50/2021
நாள்: 27.09.2023
PW .1
பெயர்: நாகராஜன்
த/பெ : அழகேசன்
வயது : 40
ஊர் : ஆலத்துார்
தொழில்: கூலிவேலை

**<u>1 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

நீங்கள் என்ன வேலை செய்து வருகின்றீர்கள் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நீங்கள் ரியல் எஸ்டேட் தொழில் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். இறந்துபோன ஜெயலெட்சுமி உங்களுக்கு எத்தனை வருடமாகத் தெரியும் என்றால் 2011 ஆம் வருடத்திலிருந்து எனக்குத் தெரியும். அவர்கள் எங்கே வசித்தார்கள் என்றால் 2011 ஆம் வருடம் அவர்கள் இலுப்பூர் ராஜேஸ்வரிடவுன்சிப்பில் வசித்தார்கள் என்று எனக்குத் தெரியும்.

அவர்கள் என்ன தொழில் செய்தார்கள் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் திருச்சி, திருவானைக்காவலில் உள்ள ஆண்டாள் கல்லுாரியில் ஆசிரியராக பணி செய்தார் என்று எனக்குத் தெரியும். மேற்படி ஜெயலெட்சுமியுடன் யார் வசித்து வந்தார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா என்றால் தெரியாது. 2011 ஆம் வருடத்திலிருந்து எத்தனை வருடமாக ராஜராஜேஸ்வரி டவுன்சிப்பில் இருந்தார்கள் என்றால் 2011 ஆம் வருடம் எனக்கு அவர்களை தெரிந்ததிலிருந்து அவர்கள் 2016 ஆம் ஆண்டு இறக்கும்வரை ராஜேஸ்வரி டவுன்சிப்பில் தான் இருந்தார்.

ராஜேஸ்வரி டவுன்சிப்பில் தான் ஜெயலெட்சுமி வசித்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் எதையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் ஆவணங்கள் தற்போது உள்ளது. நீதிமன்றத்தில் நான் இன்னும் தாக்கல் செய்யவில்லை. ஜெயலெட்சுமி உங்களை தத்தெடுத்துக்கொண்டார் என்பதற்கு சாட்சியம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வாய்மொழியாக தத்தெடுத்துக்கொண்டார். அதற்கு சாட்சியம் உண்டு. சாட்சிகள் உண்டு என்பதற்கு நீங்கள் உங்களுடைய பிராதிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சண்முகம் என்ற நபரை நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன்.

இந்துமதவழக்கப்படி எவ்வித மதச்சடங்கும் செய்துகொள்ளாமல், உங்களை ஜெயலெட்சுமி தத்தெடுத்துக்கொண்டார் என்று சொல்வது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. இறந்துபோன ஜெயலெட்சுமியை எத்தனை நாட்களுக்கு முன்பாக நீங்கள் மருத்துவமனையில் பார்த்தீர்கள்

என்றால் 06.02.2016 ஆம் தேதி திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனையில் ஜெயலெட்சுமி உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தினால் நான் தான் மருத்துவமனையில் சேர்த்தேன். 1ம் பிரதிவாதி ஜெயலெட்சுமி இறப்பதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக அவர்களை பார்த்தார்கள் என்றால் மருத்துவமனையில் ஜெயலெட்சுமி அனுமதிக்கப்பட்டபிறகு ஆறு நாட்களுக்கு பிறகு வந்து பார்த்தார்கள்.

மருத்துவமனையில் ஜெயலெட்சுமி அனுமதிக்கப்பட்டபோது, அவரிடமும், 1ம் பிரதிவாதியிடமும் ஏதேனும் கையொப்பம் நீங்கள் பெற்றீர்கள் என்றால் இல்லை. ஜெயலெட்சுமி தான் எழுதப்பட்ட உயில்சாசனத்தில் காமேஸ்வரியின் சம்மதத்துடன் கையெழுத்தும், கைரேகையும் வாங்கி, சாட்சிகளின் முன்னிலையில் என்னிடம் கொடுத்தார்கள். நானாக எந்த கையொப்பமும் அவர்களிடம் வாங்கவில்லை. அதில் உள்ள சாட்சிகளிடம் நீங்கள் எந்த கையொப்பமும் வாங்கவில்லை என்றால் நான் வாங்கவில்லை.

பூர்த்தி செய்யப்படாத பேப்பரில், கையொப்பமும், சாட்சிக்கையொப்பமும் போட்டுக்கொடுத்தார்களா என்றால் இல்லை. பூர்த்தி செய்த உயிலில் தான் கையொப்பமும், சாட்சியின் கையொப்பமும் பெற்று என்னிடம் கொடுத்தார்கள். அதில் உள்ள நோட்டரி பப்ளிக் கையொப்பம் எத்தனை நாட்கள் கழித்து வாங்கினீர்கள் என்றால் நான் வாங்கவில்லை. அதையும் அவர்கள் தான் வாங்கிக்கொடுத்தார்கள். ஜெயலெட்சுமி உயிலை என்னிடம் கொடுக்கும்போது நோட்டரி பப்ளிக் கையொப்பம் அதில் இருந்தது.

ஜெயலெட்சுமி எந்த தேதியில் கையெழுத்திட்ட உயிலை எப்போது உங்களிடம் கொடுத்தார் என்றால் 05.03.2016 ஆம் தேதி என்னிடம் கொடுத்தார். ஜெயலெட்சுமி, 1ம் பிரதிவாதியின் கையொப்பம் தான் உயிலில் உள்ள கையொப்பம் என்பதை சாட்சிகளின் முன்னிலையில், நீங்கள் ஊர்ஜிதப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் ஊர்ஜிதப்படுத்தி தான் கொடுத்தார்கள்.

நீங்கள் ஜெயலெட்சுமி மற்றும் 1ம் பிரதிவாதியால் ஏற்படுத்திக்கொடுத்ததாக சொல்லும் உயில் உண்மையில் அவர்களால் ஏற்படுத்திக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் ஜெயலெட்சுமியின் சொத்தை விற்றுத்தருவதாக உறுதியளித்து, அதன்பேரில் மோசடியாக ஜெயலெட்சுமியிடமும், 1ம் பிரதிவாதியிடமும் கையொப்பம் பெற்று, மோசடியாக அவர்கள் உங்களுக்கு உயில் எழுதிக்கொடுத்ததாக ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டீர்கள் என்றால் சரியல்ல.

இந்த உயிலில் சொல்லியுள்ள சொத்து விவரம் எதையும் உங்களுடைய பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் ஜெயலெட்சுமியின் இறப்புச்சான்றிதழாக நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணத்தில் ஜெயலெட்சுமியின் இறப்பின்போது, இறந்தவரின் முகவரி என்று பிளாட் நம்பர்.31, கிருஷ்ணாநகர், அகிலாண்டேஸ்வரிபுரம், தாளக்குடி அஞ்சல், திருச்சி, பின்கோடு–621 216 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது அவரின் முகவரி கிடையாது.

அதேபோல், இறந்தவரின் நிலையான முகவரி என்று 3/142, அம்மன்பட்டி அக்ரஹாரம், அம்மன்பட்டி கிராமம், திருவையாறு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம், பின்கோடு 621 216 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 லும் 3/142, அம்மன்பட்டி அக்ரஹாரம், அம்மன்பட்டி கிராமம், திருவையாறு தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம், பின்கோடு 621 216 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தில் இந்த ஆவணமானது இறந்துபோன ஜெயலெட்சுமிக்காக பெறப்பட்டது என்பதைக் குறிப்பிடும்படியான குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். ஆனால் இறப்புச்சான்றிதழ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 ல் இறந்த ஜெயலெட்சுமி என்பவரின் முகவரி அம்மன்பட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக அம்மன்பேட்டை என்பதற்கு அம்மன்பட்டி என்று குறிப்பிடப்பட்டுவிட்டது. ஜெயலெட்சுமியின் தாயார் பெயர் விசாலாட்சி என்பதற்கு பதிலாக விசாலா என்று குறிப்பிடப்பட்டுவிட்டது. மேற்படி இரண்டு எழுத்துப்பிழைகளையும் சரிசெய்து, வா.சா.ஆ.6 ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.6 ஆவணத்தில் நீங்கள் சொல்வது போல் ஜெயலெட்சுமியின் தாயார் பெயரும், ஊரும் திருத்தப்பட்டதற்கான குறிப்புகள் இல்லை என்றால் சரியல்ல.

நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்களில் ஜெயலெட்சுமி இறப்புக்காக தான் பெறப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 ஆவணம் உங்களுக்கும் இறந்துபோன ஜெயலெட்சுமிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொல்லி, உங்களுடைய மனுவை இலுப்பூர் வட்டாட்சியர் நிராகரித்ததற்கான ஆவணம் என்றால் சரிதான்.

ஜெயலெட்சுமியின் ராஜேஸ்வரி டவுன்சிப்பில் தான் வசித்து வந்தார் என்று காட்டுவதற்கான ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் நீங்கள்

தாக்கல் செய்யவில்லை, அவர் நிரந்தரமாக இங்கு வசிக்கவில்லை என்றும், ஒருசில மாதங்கள் மட்டுமே இங்கு வாடகை வீட்டில் வசித்து வந்தார் என்றும், அந்த சூழ்நிலையில் உங்களுடைய அண்ணன் மனைவி மூலமாக இறந்துபோன ஜெயலெட்சுமி அறிமுகமாகி, அவரது செல்வசெழிப்பான நிலையை அறிந்துக்கொண்டு, அவரிடமிருந்து அவருடைய சொத்துக்களை அபரிக்க வேண்டும் என்று போலியான ஆவணங்களை ஏற்படுத்தி அதன் மூலம் நீதிமன்றத்தில் பொய்யான வழக்கை தாக்கல் செய்து, பரிகாரம் தேட முயற்சிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**1வது பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

//sd/– நாகராஜன்,
PW.1.

//sd//– எஸ்.அன்புதாசன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் அவர்கள்.